# ஜெனரல் அவர்களின் கிறிஸ்துமஸ் செய்தி- 2024

இரட்சணிய சேனை அமெரிக்க ஐக்கிய மாகாணத்தில் சாட்சியளி என்ற மாநாட்டில் கலந்துகொள்ளும் சிலாக்கியத்தை நான் இந்த ஆண்டில் தொடக்கத்தில் பெற்றேன். அந்த வார இறுதியில் பல சிறப்பம்சங்கள் இருந்தன. ஆனால் என் மனதில் நின்றவைகளோ வியப்பூட்டும் மறுரூபமாகுதலின் கதைகள். இயேசு கிறிஸ்து என்ற ஆள்த்துவத்தில் கடவுளின் அன்பை அவர்கள் ருசித்தபோது, அநேக ஆண் மற்றும் பெண்களின் வாழ்க்கை முற்றிலும் மறுரூபமாக்கப்பட்டது. 'தேவன் இவ்வளவாய் உலகை *நேசிக்கிறார்*', ஆம், நான் நிகழ்காலமாக மாற்றியிருக்கிறேன். இந்த வசனத்தை உண்மையிலேயே இவ்விதமாக வாசிக்கிறோம்: தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார் (யோவான் 3:16). முதல் கிறிஸ்துமஸ் தினத்தன்று இருந்த அதே அன்பு, இன்னும் அந்த கடவுளின் அன்பு யதார்த்தமானது, உண்மையானது இன்னும் ஆழமானது. தேவன்பின் மாபெரும் சான்றாக அது நிலைத்திருக்கிறது. எல்லா ஜனத்திற்கான அவருடைய திட்டமாகவுமிருக்கிறது -அவருடைய குமாரனுடைய ஈவே, நமது இரட்சிப்பின் ஈவு. இது கடந்த காலம் மட்டுமல்ல, நிகழ்காலத்திலும் கூட. கிறிஸ்துமஸ் தினத்தன்று இந்த நற்செய்தியைத் தான் நாம் கொண்டாடுகிறோம்.

அந்த செய்தியினை பல வருடங்களுக்கு முன்பாகவே ஏசாயா தீர்க்கதரிசி முதலாவது அறிவித்திருந்தார்: நமக்கு ஒரு பாலகன் பிறந்தார், நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார். கர்த்தத்துவம் அவர் தோளின் மேலிருக்கும், அவர் நாமம் அதிசயமானவர், ஆலோசனை கர்த்தா, வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதான பிரபு என்னப்படும் (ஏசாயா 9:6).

இயேசுவின் பிறப்பின்போது தேவதூதர்களும் மீண்டும் இதை அறிவித்தனர்: "அப்பொழுது அந்த நாட்டிலே மேய்ப்பர்கள் வயல்வெளியில் தங்கி, இராத்திரியிலே தங்கள் மந்தையைக் காத்துக்கொண்டிருந்தார்கள். அவ்வேளையில் கர்த்தருடைய தூதன் அவர்களிடத்தில் வந்து நின்றான். கர்த்தருடைய மகிமை அவர்களைச் சுற்றிலும் பிரகாசித்தது. அவர்கள் மிகவும் பயந்தார்கள். தேவதூதன் அவர்களை நோக்கி: பயப்படாதிருங்கள். இதோ, எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோ'த்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்குத் தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார். பிள்ளையைத் துணிகளில் சுற்றி முன்னணையிலே கிடத்தியிருக்கக் காண்பீர்கள். இதுவே உங்களுக்கு அடையாளம் என்றான். அந்த க்'ணமே பரமசேனையின் திரள் அந்த தூதனுடனே தோன்றி: உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமதானமும், மனு'ர்மேல் பிரியமும் உண்டாவதாக என்ற சொல்லி, தேவனைத் துதித்தார்கள். (லூக்கா 2:8-14).

இயேசு எங்கே இருந்தாரோ அங்கே மேய்ப்பர்கள் உடனடி சென்றார்கள் என்று வேதாகமம் கூறுகிறது. அவரைப் பார்த்தவுடன், உடனடியாக அந்த சங்கதியை பிரசித்தம்பண்ணத் தொடங்கினார்கள். நான் அதை விரும்புகிறேன்! அவர்கள் உடன்தானே தங்கள் அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ளத் தொடங்கினார்கள். இயேசு அவர் யார் என்பதை மேய்ப்பர்கள் கண்டறிந்தவுடன் கொஞ்சம் கூட

நேரத்தை வீணடிக்காமல் வெளியே போய், அவரே இரட்சகர் என்ற நற்செயதியைப் பகிர்ந்தார்கள். என்ன ஒரு சாட்சி!

அப்போதிலிருந்தே விசுவாசிகள் கர்த்தருடைய வார்த்தையைப் பிரகடணப்படுத்தும் பணியான இரட்சிப்பு, மன்னிப்பு, நமது இரட்சகராகிய இயேசு கிறிஸ்து என்னும் அவருடைய குமாரனுடைய மீட்கும் செயல் போன்றவற்றை எடுத்துச் சென்றனர். ஜனங்கள் தேவனுடைய மறுரூபமாகுதலின் வல்லமையையும் அவர்களின் வாழ்க்கை மூலமாகவும் பகிர்ந்ததை சாட்சிகரித்தல் என்னும் மாநாட்டில் நான் கேள்விப்பட்டேன் பார்த்தேன். மேய்ப்பர்கள் நீண்ட நாட்களுக்கு முன்பாக இரவு நேரத்தில் நற்செய்தியை பரப்பினார்களே அதுபோன்று அவர்களும் பரப்பினார்கள்.

ஜெனரல் ‘ா கிளிப்டன் (ஓய்வு), *பரிசுத்த இடர்* என்னும் அவரது புத்தகத்தில் எழுதுகிறார்: ‘கிறிஸ்துமஸ் இயேசுவில் முழுமையாக அடங்கியுள்ளது. சரித்திரம் முழுவதிலும் இயேசுவின் நாமம் பறைசாற்றுவது அங்கே ஓா இரட்சகர் இருக்கிறார் என்று. ஓர் இரட்சகர் இருந்தால் நாம் இரட்சிக்கப்பட வேண்டும் என்ற ஒரு தர்க்கரீதி எழும்புகிறது. ஆயினும், நமது தேவை என்னவென்பதை நாம் உணர்வதற்கு முன்னரே இரட்சகர் அங்கே இருக்கிறார். நமது ஆழமான தேவையை வெளிப்படுத்துபவர் அவரே, அவரளிக்கும் இரட்சிப்புக்கு நாம் பதிலளிக்கும்படியாக தமது பரிசுத்த ஆவியினால் மென்மையாக தூண்டுகிறார். கிறிஸ்துமஸ் என்றால் இயேசுவை இரட்சகர் என கண்டுபிடிப்பது, திரும்பவும் கண்டுகொள்ளுவது, அல்லது திரும்பவும் உறுதிபடுத்துவது ஆகும். அவரைக் கண்டுகொள்ளுவதால் நாம் நம்மையே கண்டுகொள்ளுகிறோம் நமது உண்மையான நிலைமையையும் கண்டுகொள்ளுகிறோம்.

ஆண்கள் மற்றும் பெண்களுடைய இருதயங்களை தேவன் இன்னும் மாற்றுகிறார் மீண்டும் வாழச்செய்கிறார். மேலும் அந்த மேய்ப்பர்கள் போன்று, நம்மைச் சுற்றிலுமிருக்கிறவர்களுக்கு அந்த நற்செய்தியினை நம்மால் கூறமுடியும்.

இந்த கிறிஸ்துமஸ், இயேசுவின் பிறப்பை நாம் கொணடாடுகிறபோது, பரிசுத்த ஆவியின் வைராக்கியத்தால் வல்லமைபெற்று இயேசுவைக் குறித்த வார்த்தைகளை பகிர்ந்திட தேவனிடம் நாம் கேட்போம், தேவகுமாரனாகிய நமது இரட்சகர் இயேசு என்னும் விலையேறப்பெற்ற அவருடைய குமாரனின் ஈவை தேவ அன்பின் அனுபவத்தை இன்னும் அநேகம் பேர் பெற்றிட பறைசாற்றுவோம்.

கமி‘னர் ப்ரான்வின், இந்த கிறிஸ்துமஸ் சமயத்தில், நீங்கள் தேவாசீர்வாதத்தைப் பெற்றிட என்னுடன் இணைந்து ஜெபிக்கின்றார்கள்.

**லிண்டன் பக்கிங்காம், ஜெனரல்**